Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 16-2-1985 சனிக்கிழமை (மாசி 5 - ஐ. அவ் 25) முழக்கம் 12

## நேற்றும் 704 தமிழ் அகதிகள் படகில் தமிழகம் சென்றனர்!

(ராமேஸ்வரம்)

தமிழ் நாட்டிற்குச் செல்லும் இலங்கைத் தமிழ் அகதிகள் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. நேற்றும் பதினைந்து படகுகளில் 704 அகதிகள் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏஜன்ஸி செய்திகளின் படி 135 குடும்பங்களைச் சேர்ந்த 631 அகதிகள் ராமேஸ்வரம் வந்தனரென்றும் 18 குடும்பங்களைச் சேர்ந்த 73 அகதிகள் பாம்பன் வந்தனரென்றும் தெரியவருகிறது இந்தத் தொகை அதிகரிப்பால் மண்டபம் முகாமில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதே வேளை மண்டபம் முகாமிலிருந்து 100 குடும்பத்தினர் நாகபட்டினத்திற்கு அனுப்பப்பட்டனர்.

★ முல்லைத்தீவில் முகாமொன்றை ராணுவம் முற்றுகையிட்டதால்

# 58 தீவிரவாதிகள் கொலையென அரசு அறிவிப்பு

# வயலுக்கு சென்றோரை காணவில்லை என புகார்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உள்ள காட்டுப்பகுதியில் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை நேற்று அதிகாலை பாதுகாப்பு படையினர் தாக்கிய போது ஐம்பத்தெட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் இத்தாக்குதலின் போது ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இந்த முகாம் இருந்த பகுதியில் குடிமக்கள் இல்லாததினால் ஆயுதப்படையினர் சுலபமாக இந்நடவடிக்கையை மேற்கொண்டனர் என்றும், படையினருக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தையடுத்து, கொக்குத் தொடுவாய். கருநாட்டுக்கேணிப் பகுதிக்கு அருவி வெட்டுவதற்குக் கூலி ஆட்களாகச் சென்ற தமது கணவன்மார், சகோதரர்களை மீட்டுத்தருமாறு முல்லைத்தீவு அகதிகள் முகாம்களிலுள்ள சுமார் நூறு பெண்கள் அரசாங்க அதிபர் கே. ஞானச்சந்திரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொக்கிளாயுக்கும் நாயாறுக்

— 4ம் பக்கம் பார்க்க

# பாரதம் கடும் அதிர்ச்சி; கண்டனம் நஷ்டஈடு தருமாறும் கோரிக்கை!

## மீனவர் கொலை எதிரொலி இலங்கை தூதரிடம் ஆட்சேபம்

(புதுடில்லி)

தமிழக மீனவர் இருவரை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொலை செய்ததையிட்டு ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியுமடைந்துள்ள பாரத அரசின் வெளியுறவு அமைச்சு, புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் பெர்னாட் திலகரத்தினாவை நேற்று அமைச்சுக்கு அவசரமாக அழைத்து இச்சம்பவம் தொடர்பான பாரதத்தின் உணர்வுகளை வெளிப்படுத்திக் கண்டனம் தெரிவித்ததுடன் உயிர் இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறும் கோரியுள்ளது.

பாரத அரசின் உத்தரவுக்கிணங்க வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி இலங்கைத் தூதுவரை அழைத்து இதனைத் தெரிவித்தார். இதற்குமுன்னர் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வாலுக்கும் இவ்விஷயம் அறிவிக்கப்பட்டு அறிக்கை கோரப்பட்டது.

இந்திய மீனவர்களைத் தாக்குவது, சுடுவது, கொலைசெய்வது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதை இலங்கையின் தூதுவர் திரு. திலகரத்தினாவிடம் சுட்டிக்காட்டிய

—4-ம் பக்கம் பார்க்க

## ஓடமுடியாத ஜீப் ஓடியது நம்பலாம்; இது நடந்தது!

ஓட முடியாதிருந்த ஜீப்வண்டியொன்றைச் சரியாக ஓடவைத்த இளைஞர்கள், அதனைத் தம்முடன் எடுத்துச் சென்ற சம்பவம் நேற்று கோண்டாவில் டிப்போவில் நடைபெற்றது.

இங்கிருந்த ஓடமுடியாத ஒரு ஜீப்பின் நான்கு சில்லுகளை

—4-ம் பக்கம் பார்க்க

## இரண்டு மா கப்பல்கள் நேற்று வந்து சேர்ந்தன

உணவுத்திணைக்களத்துக்கான மாக்கப்பலும், சி. டபிள்யூ ஈ. நிறுவனத்திற்கான மாகக்கப்பலும் நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தன.

சி டபிள்யூ ஈ மாவு நேற்றே இறக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. உணவுத் திணைக்கள

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழக 16 அமைச்சர்களும் பதவிகளை பொறுப்பேற்றனர்

(சென்னை)

தமிழக அமைச்சரவையின் புதிய அமைச்சர்கள் பதினைந்து பேரும் நேற்று ராஜ்பவனில் ஆளுநர் திரு. எஸ். எல். குரானா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். அப்போது முதலமைச்சர் எம். ஜி. ஆரும் சமுகமளித்

—4-ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையிலிருந்து வரும் அகதிகட்கு உதவ ராமேஸ்வரத்தில் போர்க்கால ஒழுங்குகள்

(மதுரை)

இலங்கையில் இருந்துவரும் அகதிகளுக்கு உதவ போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். குருமூர்த்தி தெரிவித்தார். இவரது தலைமையில் நேற்று அதிகாரிகள் குழு அகதிகள் நிலைகுறித்து ஆராய்ந்தது.

மண்டபத்தில் இரு நூறு குடும்பங்கள் தங்குவதற்குத் தற்காலிகக் கொட்டகைகள் போடப்பட்டுள்ளன இங்கு முப்பது கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ராமேஸ்வரத்திலும் ஐந்து பெரிய கட்டடங்கள் அகதிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சத்திரத்துக்கும் ஒரு தாசில்தார் நியமிக்கப்பட்டுள்ளார். புயல் பாதுகாப்பு முகாம்களிலும் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தூத்துக்குடி, நாகபட்டினத்துக்கு தலா நூறு குடும்பங்களும், சேலத்துக்கு ஐம்பது குடும்பங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## அரிசி மூடை பட்டறி கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள சில கடைகளிலிருந்து அரிசி மூடை, டோச் பட்டறி ஆகியவைகளை இனம் தெரியாத இளைஞர்கள் நேற்று மாலை கொள்ளையடித்துச் சென்றனராம்.

சென்னையில் அமிர்தலிங்கம் அறிவிப்பு:

## இலங்கையின் தற்போதைய போக்கினால் தென்னிந்தியாவுக்கு ஆபத்து ஏற்படுகிறது!

(சென்னை)

இலங்கையின் தற்போதைய போக்கினால் தென்னிந்தியாவின் ஸ்திரத் தன்மைக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் இனி அர்த்தமில்லை பங்களாதேஷ் விவகாரத்தில் எடுத்தது போன்ற நடவடிக்கையை இந்திய அரசு எடுக்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ.அமிர்தலிங்கம் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

எத்தகைய விதத்தில் தலையிடுவது என்பதை பாரத அரசு தான் தீர்மானிக்க வேண்டுமென்று சொன்ன திரு அமிர்தலிங்கம், இத்தகைய தலையிடும் நிலையை சர்வதேசச் சட்டம் கூட அனுமதிக்கிறது என்றும் சொன்னார் மன்னாரில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டதாக லண்டன் டைம்ஸில் வெளியான செய்தி முற்றிலும் உண்மையென்றும் அவர் வலியுறுத்தினார்.

ராமேஸ்வரம், திருச்சி முதலான இடங்களில் வந்து சேர்ந்துள்ள இலங்கை அகதிகளை திரு. அமிர்தலிங்கம் கூட்டணியின் மற்றைய தலைவர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இலங்கை அகதிகளுக்கு உதவுமாறு ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் கமி

—4ம் பக்கம் பார்க்க

## மன்னார்க் கொலைகளைக் கண்டித்து 50,000 யாழ். மாணவர் பகிஷ்கரிப்பு

மன்னாரில் வட்டக்கண்டல் மகாவித்தியாலய அதிபர் சுந்தரமூர்த்தி, ஆசிரியர்களான ரத்தினதுரை, மகேந்திரன் ஆகியோர் ராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டமையையும், அப்பகுதியில் நான்கு பாடசாலைகளை இயங்க முடியாது செய்தமையும் மற்றும் மன்னார் பகுதி அட்டூழியங்களையும் கண்டிக்கும் முகமாக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, காரைநகர், ஊர்காவற்றுறை பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஐம்பதாயிரம் மாணவ, மாணவிகள் தத்தமது பாடசாலைக்கு முன்னால் நேற்றுக்காலை சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சமயம் நகரில் ராணுவ நடமாட்டம் அதிகரிக்கப்பட்டிருந்தபோதிலும், மாணவர்கள் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பை நடத்திய பின்னர்,

—4-ம் பக்கம் பார்க்க

## 4 தட்டச்சு கொள்ளை

யாழ். 'ஹோம் பிரின்ஸ்' நிறுவனக்கிளையிலிருந்துநான்கு தட்டச்சுக்களை வானொன்றில் வந்த இளைஞர்கள் நேற்றுக்

—4-ம் பக்கம் பார்க்க

நெடுந்தீவில் கல்விப் பணிப்பாளர் பேச்சு:

# பெற்றோர் ஆசிரியர் நல்லுறவின் மூலமே கல்வியின் தரத்தை உயர்த்த முடியும்!

(புங்குடுதீவு)

"ஒழுங்கு, கட்டுப்பாடும் உள்ள அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குதற்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பெற்றோர்கள் துணைபுரிய வேண்டும் பெற்றோர் - ஆசிரியர் நல்லுறவின் மூலமே பாடசாலைகளில் கல்வித் தரத்தை உயர்த்த முடியும். இந்த உண்மையை நன்குணர்ந்து செயற்படுமாறு அனைவரையும் வேண்டுகின்றேன்."

இவ்வாறு யாழ் - பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு ம. சிமியாம்பிள்ளை நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் புதிய கட்டடத்தைக் கடந்த புதன்கிழமை மாலை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துப் பேசுகையில குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாடசாலைகள் சீராக இயங்குதற்கும், மாணவர்கள் சீரிய கல்வியினைப் பெறுதற்கும் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

ஒருலட்சத்து இருபதாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இப்புதிய கட்டடம் இவ்வித்தியாலயத்தின் நீண்டகாலக் குறை பாட்டினைப் போக்கியுள்ளதென்றும் அவர்மேலும் கூறினார்.

பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. நா. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு க. குகதாசன், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாலிங்கம், நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி ஆகியோருட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## ஆவரங்கால் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை!

ஆவரங்காலில் நடந்த அசம்பாவிதத்தின் போது கைது செய்யப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாதிருக்கும் இளைஞர்களை விடுவிக்க யாழ் அரசாங்க அதிபரைச் சந்தித்துப் பேச வேண்டும் என்ற தீர்மானம் புத்தூர் பிரஜைகள் குழுவினால நிறைவேற்றப் பட்டது.

சீருடையினரின் நடவடிக்கைகளால் இருப்பிடங்களை விட்டு வெளியேறி முகாம்களில் இருக்கும் தமிழ் அகதிகளுக்கு உணவுப பொருட்கள், உப உணவுப் பொருட்கள், உடு புடவை என்பனவற்றை இப்பகுதி மக்களிடமிருந்து சேகரித்துக் கொடுப்பதென்றும் இம்முயற்சிக்கு அவ்வப்பகுதி சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள், இளைஞர் இயக்கங்கள் என்பனவற்றின் உதவியைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## திருட்டு

(மிருசுவில்)

மிருசுவில், கொடிகாமம் பகுதிகளில் பெரும் தொகையான தந்திக்கம்பிகள் இரவு நேரத்தில் திருடர்களினால் வெட்டப்படுகின்றன. இதனால் தற்போது இப் பகுதியினூடான தொலைத்தொடர்புகள் பாதிப்படைந்துள்ளன.




❋ சுண்டுக்குளி காட்டுக்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்த தியாகராஜா ஸ்ரீபாலரஞ்சனி தம்பதிகளின் புதல்வன் நிஷாந்தன் இன்று தனது மூன்றுவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ அளவெட்டி, செல்வநேசன் நாகபூஷணி தம்பதிகளின் மகன் அர்ச்சுனு இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ கைதடி கிழக்கு. குமாரவேல் நாகேஸ்வரி தம்பதிகளின் மகள் தயாளினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ குருநகர், ஞானசேகர் பேபி தம்பதிகளின் மகன் சந்திரசேகர் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ அரியாலை அமிர்தலிங்கம் இராஜமலர் தம்பதிகளின் மகன் கமலகாந்தன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ இணுவில் கிழக்கு பாலசுப்பிரமணியம் சத்தியபாமா தம்பதிகளின் மகன் பாலச்சந்திரன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ வயாவிளான் எஸ். எஸ் வி, சந்திரன்- பாலசரஸ்வதி தம்பதிகளின் மகன் உமாஷங்கர் இன்று தனது பதினோராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ புத்தூர் தில்லையம்பலவாணர் சிவாகாமிப்பிள்ளை தம்பதிகளின் மகன் விமலன் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ புங்குடுதீவு ஜெயக்குமார் நளினி தம்பதிகளின் மகள் தபோதினி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்,

❋ காவலூர் கிழக்கு. அந்தோணி- றீற்று தம்பதிகளின் மகன் டேவிட்டர் இன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்;

❋ பாஷையூர் மரியநாயகம் எலிசபெத் தம்பதிகளின் மகன் ஞானகாந்தன் இன்றுதனதுபிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

மிருசுவில் பகுதி மக்கள்

## உப-உணவுப் பொருட்கள் உற்பத்தியில் அதிகநாட்டம்

(மிருசுவில்)

தற்போது இப் பகுதிகளில் உப-உணவுப் பொருட்களைப் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டப்பட்டு வருகின்றது. தரிசு நிலங்கள் அனைத்தும் பண்படுத்தப்பட்டு மரவள்ளி, கௌபி, சோயா போன்ற உப உணவுப்பொருட்கள் செய்கை பண்ணப்படுகின்றன

குடா நாட்டில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுப் பொருட் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு செயற்படும்படி குறிப்பிட்ட மக்கள் கழகம் ஒன்று விடுத்த வேண்டுகோளை அடுத்து இளைஞர்கள் இம்முயச்சியில் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். என்ற தெரிவிக்கப்படுகிறது.

## சின்னக்கடையில் எலும்புகள்

யாழ் - சின்னக் கடையின் இறைச்சிக் கடையிலிருந்து எலும்புகள் வீதிகளில் வீசப்படுகின்றன. இதனால்இப்பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது அத்துடன் அப்பகுதி வீதிகளில் துர்நாற்றம் வீசுகின்றது.

## இலட்சார்ச்சனை

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை எதிர் வரும் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று மாசிமகத்தன்று நிறைவு பெறும்

தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு நெருடிக்கடிகளினால் தினசரி காலை 7 மணிக்கு அபிஷேகத்துடனும் மாலை 3 மணிக்கு பூஜையுடனும் ஆரம்பமாகி நேரத்துடனேயே முடிவடையும் இலட்சார்ச்சனை கடைசி மூன்று தினங்களும் விசேட தீபங்கள் ஏற்றபபடும்.

## சிவராத்திரி நிகழ்ச்சிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன கோவிலில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரிவிழா கொண்டாடப்படும்.

நான்கு ஜாமப் பூசைகளும் வழிபாடும், பக்திப்பாடல்கள் ஆகியனவும் இரவிரவாக நடைபெறும். மறுதினம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(சுழிபுரம்)

சிவராத்திரியை முன்னிட்டு சுழிபுரம் வடக்கு ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் நானகு ஜாம அபிஷேகமும், விசேட பூசையும், அடியார்கள நித்திரை விழித்தல், புராணங்கள், பஜனை, அடிமுடிதேடிய படலம் ஆகிய சிவகருமங்களும் நடைபெறவுள்ளது.

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயததில் இம்மாதம் 17ம் திகதி சிவராத்திரி நடைபெறுகின்றது. இரவு நான்கு காலப் பூசையும், பஜனையும் நடைபெறும்.

(அரியாலை)

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில சிவராத்திரி நோன்பு எதிர் வரும் 17ந் திகதி இரவு அனுஷ்டிக்கப்படும். 23ந் திகதி அலங்கார உற்சவம் நடைபெறும்.

## வரி விளம்பரம்

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள். ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

## சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ள நாடுங்கள்-கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம்.

## வகுப்புகள்

பல்கலைக்கழக பட்டதாரி படிப்புக்கு சமமான பாடத்திட்டத்தின்படி கலை (B A) வர்த்தகம் (B Com). விஞ்ஞானம் (B Sc) [ Physical, Maths, & Bio ] பட்டப்படிப்புகள் கல்வித திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்படடவுள்ளன. A/L நான்கு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் 5-3-85 முன் விண்ணப்படிவங்களுக்கு தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

முறையிட்டும் பலன் இல்லை:

## சம்பளமுற்பணம் கடன் சிலருக்குஇன்னமும்இல்லை

(அச்சுவேலி)

வடக்குக் கிழக்குப் பகுதிக்கு வெளியே கடமை புரியும் தமிழ் ஆசிரியர்களில் பலருக்கு இதுவரையும் 1983ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேடமாக வழங்கப்பட்ட இரண்டு வருட; ஒருவருட சம்பள முற்பணக் கடன் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஆசிரியர் உட்பட எல்லாருக்கும் பத்து வருடத்திற்கு மேற்பட்ட சேவை உடையவர்களுக்கு இரண்டு வருட சம்பளமொத்தமும்; பத்து வருடத்திற்கு குறைந்த சேவை உடையவர்களிற்கு ஒருவருட சம்பள மொத்தமும் "விசேட முற்பணம்" கடன் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

இந்த விசேட முற்பணத்தை தகுதியான பலரும் பெற்றுக் கொள்வதற்கு உரிய காலம் கடந்த வருடம் நடுப்பகுதியுடன் முடிவடைந்த போதிலும்; தமிழ் மாவட்டங்களிற்கு வெளியே கடமைபுரியும் ஆசிரியர்கள் பலருக்கு இதுவரையும் இந்தக்கடன் வழங்கப்படவில்லை என தெரியவருகின்றது. இதுபற்றிசம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிராந்தியங்களிற்கு பொறுப்பான அதிகாரிகளின் கவனத்திற்கு விடயத்தைக் கொண்டு வந்த போதிலும் குறிப்பிடத்தக்களவு பலன் கிடைக்கவில்லை எனவும் அறியப்படுகின்றது.

## இந்தச் சைக்கிள் உங்களுடையதா?

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இம்மாதம் எட்டாம் திகதி பாதுகாப்புப் படையினர் நடமாட்டத்தின்போது உண்டான பதற்றவேளை, தவறவிடப்பட்ட S 1050 8706 இலக்க PSO ரக சைக்கிள் ஒன்று கண்டெடுக்கப்பட்டு சி. எஸ். கே சந்தியில் உள்ள வகுப்புத் தொழிலாளர் சங்கத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## உங்களுடையதா?

கரவெட்டி வடக்கு மயில்வாசனம் யோகமலரது அடையாள அட்டையும், கொழும்பு-11 சுரேஸ் என்பவரது கடிதங்கள் அடங்கிய பார்சல் ஒன்றும் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன உரியவர்கள் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## கடலில் பாய்ந்த பஸ்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு- வேலணைப் பாலத்திற் சென்று கொண்டிருந்த பஸ்வண்டியொன்று திடீரெனப் பாதையை விட்டுவிலகிக் கடலிற்பாய்ந்தது. இதனால் இந்தப் பஸ் வண்டியில் பயணம் செய்தோர் அனைவரும் கடல் நீரில் மூழ்கி எழுந்தனர். பிரஸ்தாப பஸ் புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதேஇச்சம்பவம்நிகழ்ந்தது.

பஸ்வண்டியினுள் குழந்தைகள், பெண்கள் உட்படப்பலர் இருந்தனரெனினும் ஆபத்தான காயங்கள் எதுவும் ஏற்படாது தப்பினர்.

## ஓராண்டு நினைவாஞ்சலி



### செல்வி கலைவாணி அழகராஜா

தோற்றம் 10-10-1959 மறைவு 16-02-1984

அன்பின் திருவுருவாய் அனைவருக்கும் இனியவளாய் எங்கள் குடும்பத்தின் செல்வமாய் விளங்கிய கலா—நீ எம்மை எல்லாம் துன்பக்கடலில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்நது இன்றுடன் ஆண்டு ஒன்று ஆகிவிட்டது அம்மா. ஆயினும் நீ எம்முடன் இரண்டறக் கலந்து வாழ்வதாகவே உணர்கின்றோம்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உனது பிரிவால் துயருறும்

தவம் அழகராஜா
'கலைவாணி வில்லா'
வெளிச்சவீட்டு முகப்பு
கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.

அம்மா அப்பா அண்ணா
மற்றும் உறவினர்கள்
நண்பர்கள்

### உதய சிந்தனை

எந்த அரச இன்பத்தில் பேராசை கொண்டு உறவினரைக் கொல்வதற்கு முன் வந்தோமோ, அக்காரணத்தால் அந்தோ! பெரும்பாவத்தையே செய்வதற்கு நாம் துணிந்தவர்களானோம்.

- பகவத் கீதை.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

16-2-85 சனிக்கிழமை (இரத்தாக்ஷி மாசி 5)

# மருத்துவிச்சியின் பணி அவசியமாகி விடுமோ?

பஞ்சம், பசி, பட்டினி ஆகியவற்றினால் வடபகுதி இப்போது அகதிகள் முகாமாக மாறிக்கொண்டிருக்கின்றது என்று இரண்டு தினங்களுக்கு முன்னர் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

தாங்கமுடியாத பசியின் கொடுமையினால் ஆயிரக்கணக்கான தமிழ்க் குழந்தைகளும் பெண்களும் தமிழ்நாட்டில் அகதிகளாக குடியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி கடந்த சில நாட்களாக அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கிறது.

கடற் கண்காணிப்பு வலயத்தில் பீரங்கிக் குண்டுகள் சகிதம் காவல் புரிந்துகொண்டிருக்கும் கடற்படையினரையும் துச்சமென மதித்து வள்ளங்களிலும் படகுகளிலும் வடபகுதி அகதிகள் தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டு ஜூலைக்கலவரத்தின் போது தமிழகம் சென்ற நாற்பதாயிரம் ஈழத்தமிழர் திரும்பிவராமல் இன்னமும் அங்கேயே இருக்கின்றனர்.

அவர்கள் திரும்பவும் இங்கு வரக்கூடிய சூழ்நிலை தோன்றக்கூடியவாறு அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு இந்தியா பல தடவை வேண்டுகோள் விடுத்தும், எல்லாமே ''நீர் மேல் எழுத்து'' போன்று அமைந்துவிட்டது.

அதுமட்டுமன்றி, மேலும் மேலும் அகதிகள் அங்கு செல்லும் நிலையே உருவாகிவருகின்றது.

கடந்த இருமாதங்களுக்குள் மேலும் நாலாயிரம் பேர் இவ்வாறு சென்றுள்ளனர். இன்னமும் போய்க்கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவின் கனிவான இதயமும், இந்திய அதிகாரிகளின் மனிதாபிமான நடவடிக்கைகளும் ஈழத்தமிழ் அகதிகளை அங்கு நிம்மதியாக வாழ வைக்கின்றன.

புதிதாக உருவாகிவரும் இந்த நிலையை பங்களாதேஷின் போருக்கு முன்னைய நிலையுடன் சரியாக ஒப்பிட்டுக் கூறியுள்ளனர் கூட்டணித் தலைவர்கள் திருவாளர்கள் சிவசிதம்பரமும் அமிர்தலிங்கமும்.

அன்று பங்களாதேஷ் அகதிகள் உயிரைக் கையில் பற்றிக்கொண்டு, கட்டுமரங்களிலும் தோணிகளிலும் இந்தியாவுக்குள் ''படையெடுக்க'' வேண்டிய நிலை ஏற்பட்டதால்தான், பங்களாதேஷ் பிரச்சினையில் பாரதம் நேரடியாக தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனையே கலவான எம், பி திரு. சரத் முத்தட்டுவேகம இரு வாரங்களுக்கு முன்னர் ''மருத்துவிச்சி'' என்ற அருமையான பதத்தை உபயோகித்து அழகாக வர்ணித்திருந்தார்.

''பங்களாதேஷுக்கு மருத்துவிச்சி வேலை பார்த்த பாரதம், இலங்கைத் தமிழ், அகதிகள் அங்கு தொடர்ந்து செல்வதால் அதே மருத்துவிச்சி வேலையை இலங்கைக்கும் பார்க்கலாம்'' என்ற சரத்தின் அன்றைய பேச்சும், இன்று கூட்டணித் தலைவர்கள் தெரிவித்திருக்கும் ஒப்பீடும், மிகவும் ஒற்றுமையானவையாகவே தெரிகின்றன.

தற்போதைய நிலை தொடருமானால், தமிழகத்திலுள்ள ஈழத்தமிழ் அகதிகள் தொகை வெகுவிரைவில் இரண்டு லட்சமாக அதிகரிக்கலாமென்றும் கூட்டணித் தலைவர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

போகின்ற போக்கைப் பார்த்தால் இரண்டுலட்சம் அல்ல, இருபதுலட்சம் தமிழர்கள் கூட தமிழ் நாட்டுக்குள் நுழைந்து விடுவார்களோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் கமிஷனரும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களும், உலக தொண்டர் ஸ்தாபனங்களும் ஈழத்து அகதிகள் பிரச்சினையில் தலையிட வேண்டிய நெருக்கடி நிலை விரைவில் உருவாகினாலும் ஆச்சரியப்பட முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினையை வெறுமனே 'பயங்கரவாதம் பயங்கரவாதம்' என்று வரட்டுக் கூச்சல் போடுவதால் தீர்த்துவிடமுடியாது அணுகு முறையில் அரசு சரியான மாற்றமொன்றைக் கொண்டுவரவேண்டியது அவசியமாகிக் கொண்டிருக்கின்றது.

இந்தமாற்றம் உடனடியாக ஏற்படாவிட்டால் நிலைமை பாரதூரமானதாகிவிடலாம். அதன் பின்னர் 'மருத்துவிச்சி' யில் பிழை கண்டுபிடிப்பதில் அர்த்தமில்லை.

★ பொலிஸ் தடியடி ★ தீவைப்புகள்

# கோபாவேசப் போராட்டத்தில் பங்களாதேஷ் மாணவர்கள்

(டாக்கா)

பங்களாதேஷில் மாணவர் தலைவர் ஒருவர் சமீபத்தில் கொலை செய்யப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து பங்களாதேஷ் தலைநகரான டாக்காவின் பல்வேறு பகுதிகளிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் பெரும் கலகமாக உருவெடுத்து நகரையே பெரும் பரபரப்புக்குள்ளாக்கிவிட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது கலகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிசார் பல தடவைகள் அடுத்தடுத்து தடியடிப் பிரயோகமும், கண்ணீர் புகைப் பிரயோகமும் செய்தனர் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கோபாவேசம் கொண்ட மாணவர்கள் அரசாங்க அலுவலகங்கள் சிலவற்றிற்கும் தீ வைத்து சேதம் விளைவித்துள்ளனர் செயலகத்தைச் சுற்றிப் பொலிசார் ஆயுதங்கள் சகிதம் காவல் புரிந்து வருகின்றனர். செயலகத்துக்குள் புகுந்து மறியல் செய்ய வேண்டும் என்ற மாணவர் மத்திய செயற்குழுவின் தீர்மானத்தின் எதிரொலியாகவே இப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நேற்று ஆறுமணித்தியால ஹர்த்தால் நடத்தவும் மாணவர்கள் தீர்மானித்திருந்தனர். பங்களாதேஷின் இரு பெரும் எதிர்க்கட்சிக் கூட்டணிகள் மாணவர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன

இது இவ்வாறு இருக்க, ஏப்ரல் மாதம் ஆறும் திகதி நடத்தப்படவுள்ள பொதுத் தேர்தலில் கலந்து கொள்வதில்லை என முக்கிய இருஎதிர்க் கட்சிக் கூட்டணிகள் அறிவித்துள்ளன. இம் மாதம் இருபத்துநான்காம் திகதி வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும்போது அந்த நாளை ஆட்சேப நாளாக அனுஷ்டிக்கவும் அவை முடிவு செய்துள்ளன.

இதேவேளை பொதுத் தேர்தல் நடுநிலையுடன் நடத்தப்படும் என்று ஜனாதிபதி லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத் அறிவித்துள்ளார்.

தென்கொரிய ஆளும் கட்சி

# நகர்ப்புற தோல்வி குறித்து பரிசீலனை செய்ய தீர்மானம்

(ஏடன்)

தென்கொரியத் தேர்தலில் ஜனநாயக நீதிக் கட்சி நகர்ப்புறங்களில் தோல்வியடைந்தது குறித்துப் பரிசீலனை செய்யவுள்ளது. நகர்ப்புறங்களில் எதிர்க்கட்சிகளே வெற்றி பெற்றுள்ளன.

ஆளும் ஜனநாயக நீதிக் கட்சிக்கு இத்தேர்தலில் 148 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. புதிய எதிர்க்கட்சி ஒன்று எதிர்பாராத வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா உதவி

# பாரதப் பகைமை உயர்வுக்கு வழியாகும் என்கிறது ரஷ்யா

(மாஸ்கோ)

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அதிகரித்த அளவு ஆயுதங்கள் வழங்கி வருவதை சோவியத் யூனியன் வன்மையாகக் கண்டித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இவ்விதம் கூடியளவு ஆயுதங்கள் வழங்குவது பாகிஸ்தான் பாரத விரோதப்போக்கைக் கடைப்பிடிக்கவே உதவும் என்று சோவியத் யூனியன் கூறியுள்ளது.

### வர்த்தக உறவு

பாரதமும் செககோசிலேவேகியாவும் நீண்டகால வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் நேற்றுத் புதுடில்லியில் வைத்துக் கைச்சாத்திட்டன.

## பஞ்சாப்பில் தடைப்பகுதி

பஞ்சாப் மாநிலத்தின் பாகிஸ்தான் எல்லையின் 400 மைல் நீளப்பிரதேசம் 500 மீற்றா அகலத்துக்கு தடைசெய்யப்பட்ட பகுதியாக பிரகடனம் செய்ய இந்தியா ஆலோசித்து வருவதாக இந்திய ஐக்கிய செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சிபெற எல்லைப்புறம் வழியாக பாகிஸ்தானுக்குள் செல்வதாக இந்தியா தெரிவித்த கருத்தை பாகிஸ்தான் மறுத்துள்ளது. அதனால் எல்லைப் புறத்தில் முட்கம்பி வேலியும் போடப்படலாம் என செய்தி ஸ்தாபனம் கூறியுள்ளது

விண்வெளி ஆயுதமயம் - அணு ஆயுதம்

# ரஷ்யாவும் கிரேக்கமும் கண்டித்து கூட்டு அறிக்கை

(மாஸ்கோ)

விண்வெளியை இராணுவ வசதிப் பெருக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்கும், அணு ஆயுத உற்பத்தி அதிகரிப்புக்கும் எதிராக சோவியத் யூனியனும், கிரேக்கமும் ஏகமனதாகக் குரல் எழுப்பியுள்ளன.

நான்குநாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு சோவியத் யூனியன் வந்த கிரேக்கப் பிரதமர் திரு. அட்ரியஸ் பெப்பன்ட்ரேவின் விஜய முடிவில் சோவியத் யூனியனுடன் இணைந்து மாஸ்கோவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்விடம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

படைப்பலக் குறைப்புக்குப் பாடுபடவேண்டியது சர்வதேச ரீதியில் சகல நாடுகளினதும் கடமையுமாகும் என்றும் இக் கூட்டறிக்கை கூறுகிறது.

விண்வெளியில ஆயுத விலக்குத் தேவை என்ற இவ்விரு நாடுகளினதும் கோரிக்கை குறிப்பாக அமெரிக்காவையே குறிப்பிடுகின்றது என கருதப்படுகின்றது.

புதுடில்லியில் அணு ஆயுதப் பரிகரணம தொடர்பாக நடைபெற்ற ஆறு நாடுகளின் உச்சி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பிரகடனம் குறித்தும் இருநாடுகளாலும் பிரஸ்தாபிக்கப்பட்டன. இப்பிரகடனத்துக்குத் தான் உறுதியான ஆதரவு வழங்குவதாக சோவியத் யூனியன தெரிவித்துக் கொண்டது.

மேற்காசியப் பிரச்சினை தீர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த இவ்விரு நாடுகளும் ஈரான்-ஈராக் யுத்தம் நீடிப்பது குறித்துத் தமது கவலையை வெளியிட்டன. இந்த யுத்தம் உடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென அவை வற்புறுத்தின. தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் நடவடிக்கைக்கும் இவ்விரு நாடுகளும் கண்டனம் தெரிவித்தன.

## புகலிடமளிக்க பிரிட்டிஷ் அரசு மறுத்தது

(லண்டன்)

பாரத பஞ்சாப் மாநிலத்தின் முக்கிய காலிஸ்தான் பிரிவினை இயக்க பிரமுகர் ஒருவருக்கு அரசியல் புகலிடமளிக்க பிரிட்டிஷ் அரசு மறுத்துள்ளது.

இம்மாதம் பத்தாம் திகதி அமெரிக்காவிலிருந்து வந்த இவர் பிரிட்டிஷ் அரசிடம் புகலிடம் கோரினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோல் கடந்த சில மாதங்களுக்கு முன் சீக்கியத் தலைவர் பிந்தரன் வாலேயின் உறவினர் ஒருவர் அரசியல் புகலிடம் கோரியபோதும் பிரிட்டிஷ் அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிதம்பரம் கப்பல் தீவிபத்து:

# கருகிய 27 சடலங்கள் மீட்பு எழுவர் நிலை பற்றி மர்மம்

(சென்னை)

சிங்கப்பூரில் இருந்து சென்னை நோக்கி வருகையில் நடுக்கடலில் தீப்பிடித்துக் கொண்ட 'சிதம்பரம்' கப்பலில் இருந்து நேற்று முன் தினம்வரை கருகிய நிலையில் இருபத்தேழு சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் சடலங்களை மீட்கும் பணி தொடர்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் எழுவரின் சடலங்கள் கப்பலுக்குள் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது என்றும் சென்னையில் இருந்து நேற்றுக் கிடைத்த தகவல் தெரிவித்தது.

இவ்விபத்தின் போது 210 பயணிகளின் சகல உடமைகளும் தீயில் எரிந்து சாம்பராகி விட்டன.

இக்கோரவிபத்து குறித்து பிரதமர் திரு ராஜீவ் காந்தியும், தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ், எல், குரானாவும் ஆழ்ந்த கவலையும், அனுதாபமும் தெரிவித்துள்ளனர்.

ஈழமுரசு

## நால்வருக்கு மரணதண்டனை; அண்ணன் தம்பி சுட்டுக்கொலை!

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரானுக்கும் மொரக்கொட்டாஞ்சேனைக்குமிடையே கோரக்கள்ளிமடு என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு மூவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் இருவர் முஸ்லிம்கள், மற்றவர் தமிழர். அதேவேளை கல்லடி பீச் ரோட்டில் மற்றொரு தமிழருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது சமூக விரோதிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதாம். வெல்லாவெளிப் பொலிஸ் பகுதியில் சேவையிலீடுபட்டவர்களால் பல வீடுகள் எரிக்கப்பட்டதாகவும், இரு சகோதரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. அக்கரைப்பற்று விவசாய சேவை நிலையத்தில் ஜீப் வண்டி கடத்தப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### இயந்திரங்கள் திங்களன்று வரும்:

# கனடாவின் 17 லட்ச ரூபா உதவியுடன் யாழ் தீயணைக்கும் படை உருவாகிறது!

யாழ்ப்பாண மாநகரசபையின் தீயணைக்கும் படை இயந்திரங்களுக்கான பதினேழு லட்சம் ரூபா செலவையும் இலங்கையிலுள்ள கனடிய தூதரகம் பொறுப்பேற்றுள்ளது. இதற்கான முழு இயந்திரங்களும் நாளை மறுதினம் கொழும்பு வந்து சேரவுள்ளன என்று யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ வீ. கே. சிவஞானம் நேற்றுத் தெரிவித்தார்

யுனிசெப் உதவித் திட்டத்தின் கீழ் இரண்டு வாரம் தமிழ்நாட்டுக்குச் சென்று பல்வேறு அபிவிருத்தி வேலைகளையும் பார்வையிட்ட பின்னர் நேற்று முன்தினம் யாழ்நகர் திரும்பிய ஆணையாளர் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாற்றினர்.

கனடா தூதரகம் அளிக்கும் நன்கொடையின் பிரதி உபகாரமாக யாழ்ப்பாணம் தீயணைக்கும் படைக்கு "கனடிய தீயணைக்கும் படை" என்று பெயரிட ஆலோசித்துள்ளதாகவும் தெரிவித்த ஆணையாளர், இதனை அங்குரார்ப்பணம் செய்துவைக்க கனடிய தூதரை அழைக்கத்தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் சொன்னர்.

தீயணைக்கும் படைக்கென பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஐந்துலட்சத்து நாற்பத்து மூவாயிரம் ரூபாவும் வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டு அதிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டி மூலம் இதன் பராமரிப்பு வேலைகளைக் கவனிக்கவும் ஆணையாளர் உத்தேசித்துள்ளார்.

யாழ் நூலகத்துக்கு இந்திய தூதரகத்தினூடாகதமிழ்நாடு அரசு வழங்கியுள்ள நூலகளை இங்கு கொண்டு வர எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் பற்றியும், யுனிசெவ் உதவியுடன் ஒருகோடி அறுபத்தைந்து லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள குடிநீர் வினியோக சுகாதார சேவைகள் பற்றியும் ஆணையாளர் பத்திரிகையாளர்களிடம் விபரித்தார்.

### செம்படையும் மறுப்பு

ஹற்றன் நாஷனல் வங்கிக் கொள்ளை, தனிநபர்களைக்கடத்துதல் பணயம் கேட்டல், தனியார் வீடுகளில் கொள்ளை, போக்குவரத்துச் சபை, தபால் நிலையங்கள், கூட்டுறவுச்சங்கங்களின் கொள்ளைகளுக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று தெரிவித்து தமிழீழ செம்படைக் கெரில்லாக்கள் அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

## முதல் இரண்டு பிரசவத்துக்கு மூன்று மாத சம்பள லீவு!

(கொழும்பு)

அரசாங்க, தனியார் துறை பெண் ஊழியர்களுக்கு மகப்பேற்றுக்காக மூன்று மாத லீவு வழங்கும் சட்ட மூலம் இரண்டு மாதங்களுக்குள் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது. தொழில் அமைச்சு இந்த கல்சட்டமூலத்தை இபபோது தயாரித்து வருகிறது. இது உடன் சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு பரிசீலனையின் பொருட்டு அனுப்பி வைக்கப்படும்.

தொழில் அமைச்சர் திரு. பி. ஸி. இம்புவானவின் இப்புதிய சட்டத்தின்படி, இனிமேல் முதலிரு பிள்ளைகள் பெறுவதற்கும் ஒவ்வொன்றுக்கும் மூன்று மாத லீவு வழங்கப்படும். அதன் பின் பிறக்கும் பிள்ளைக்குரிய லீவாக நாற்பத்திரண்டு நாட்கள் தாய்மாருக்கு வழங்கப்படும்.

முன்னர் மகப் பேற்று லீவாக நாட்பத்திரண்டு நாட்கள் மட்டுமே வழங்கப் பட்டு வந்தது

### மன்னர்...

—1 ஆம் பக்கத் தொடர்

யாழ் மாணவர் பிரதிநிதிகள் குழுவினர் யாழ்ப்பாணம் கல்விக்கந்தோருக்குச் சென்று கல்வி அதிகாரிகளிடம் மகஜரொன்றைக் கையளித்தனா.

மாணவர்கள் கல்வியில் கை வைக்காதே; சிங்கள இனவெறி அரசே தமிழரைக் கொல்வதை நிறுத்து; தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்யாதே; மாணவர் மேல் மேற்கொள்ளும் வன்முறையை நிறுத்து; மனித உரிமை மீறலில ஸ்ரீலங்கா முன்னணியில் என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளை மாணவர்கள் தாங்கியிருந்தனர்.

### ஓட முடியாத...

— 1-ம் பக்கத்தொடர்

யும், பட்டரியையும் சில இளைஞர்கள் நேற்று முன்தினம் கழற்றித் தம்முடன் எடுத்துச் சென்றதை ஈழமுரசு நேற்று வெளியிட்டிருந்தது.

நான்கு சில்லுகளுக்கும் காற்றடித்து. பட்டரியையும் 'சார்ஜ்' செய்து கொண்டு வந்த அதே இளைஞர்கள், டிப்போ ஊழியர்கள் பார்த்திருக்க சில்லுகளையும் பட்டரிகளையும் பொருத்தி நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் ஓட்டிச் சென்றனராம்.

### 58 தீவிரவாதிகள்...

—1-ஆம் பக்கத் தொடர்

குமிடையிலுள்ள இப்பிரதேசத்துக்குப் சுமார் எண்பதுக்கும் அதிகமான ஆண்கள் இரு தினங்களுக்கு அருவிவெட்டச் சென்றதாகவும் இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்றும் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே அவர்களின் மனைவியரும், சகோதரிமாரும் அசர அதிபரிடம் புகார் செய்ததாகவும் தெரியவந்துள்ளது.

### நான்கு...

—1-ஆம் பக்கத் தொடர்

காலை கொள்ளையடித்துச் சென்றனர். இயந்திரத் துப்பாக்கிகளுடன் வந்த சுமார் பத்து இளைஞர்கள் இங்கிருந்த ஊழியர்களைப் பயமுறுத்திவிட்டு கொள்ளையை நடத்தினராம்.

### பாரதம்கடும்..

1-ஆம் பக்கத் தொடர்

திரு ரமேஷ் பண்டாரி இது சம்பந்தமாக இலங்கை அரசு தற் கட்டுப்பாட்டினைப் பேண வேண்டும் எனவும் சொன்னர்.

இவ்வாறான சம்பவங்கள் தினசரி அதிகரித்து வருவதாலும், அகதிகள் அதிகமாக வருவதாலும் இந்தியா விரைவில ஒரு இக்கட்டான நிலக்கு இட்டுச் செல்லப்படக் கூடுமெனவும் எடுத்துக் கூறப்பட்டது.

### இலங்கையின்...

—1-ஆம் பக்கத் தொடர்

ஷனிடம் கோருமாறு நட்பு நாடுகளிடம் திரு, அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

### தமிழக 16...

1-ஆம் பக்கத் தொடர்

திருந்தார்.

இதற்குப் பின்னர் அவர்கள் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா சமாதிக்குச் சென்று மலா வளையம் சாத்தி வணக்கம் செலுத்தினர்.

அ. தி. மு. க அமைச்சரவையில் தருவாளர்கள் இரா. நெடுஞ்செழியனும், எஸ், இராமச்சந்தரனும நேற்று முனதினம் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமசசந்திரன் ஞாயிறுக்கிழமை பதவிப் பிரமாணமசெய்துகொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

சகல அமைச்சர்களும்நேற்று தமது அமைச்சுக்களுக்குச் சென்று வேலைகளைக கவனித்தனர்.

### இரண்டு மா...

— 1-ம் பக்கத் தொடர்

மாவு இன்று இறக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வநியோகிககபபடும்.

உணவுத் திணைக்களத்துக்கு மேலும் ஒரு கப்பல் நாளை வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.


# I. C. M. A.

## [MAY '85 EXAMS]

Section A, B & Part I

COURSES COMMENCING FROM
FEBRUARY 18th '85

குறிப்பு

மூன்று மாத காலத்துள், மொத்த விரிவுரை மணித்தியாலங்களில், மாற்றமேதுமில்லாமல், முழுப்பாடத்திட்டமும், சிறந்த முறையில் போதிக்கப்படும்.

விரிவுரையாளர் குழு:

V. கருணாநிதி, S. அருள்வரதன்
K. P. அரவிந்தன், ஜோய் டேவிட்,
Mrs. S. மூர்த்தி

For Details :

RAPID RESULTS INSTITUTE

58, Stanley Road, Jaffna.

"GOOD WINE NEEDS NO BUSH"



## மரண அறிவித்தல்

கந்தையா - காசிப்பிள்ளை (ஐயாத்துரை) J. P,

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், முன்னாள் நல்லூர் சந்தை குத்தகையாளரும்) காலமாகி விட்டார். இவர் சரஸ்வதியின் அன்புககணவரும், இராசரெத்தினம், வசந்தா (பொதுசன நூலகம் - யாழ்ப்பாணம்) அரசரெத்தினம் (சவூதி அரேபியா) வினிதா, குணரெத்தினம் (Holland-ஹொலண்ட்), சிவரெத்தினம், தவரெத்தினம் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின ஈமக்கிரியைகள் (17-2-85) ஞாயிறு காலை 10 மணிக்கு இல: 10, இராசவீதி, நல்லூர் இல்லத்தில்நடைபெற்று செம்மண் மயானத்திறகு எடுததுச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- கா. இராசரெத்தினம்.



## குளோபல்

### முந்திய செய்தி

குளோபல் ரெலெக்ஸ் கொள்ளை

யாழ்ப்பாணம் குளோபல் கொம்யூனிக்கேஷன் நிறுவனத்திலிருந்து சுமார் ஒரு லட்சம் பெறுமதியான ரெலெக்ஸ் இயந்திரம் நேற்றுக்காலை இனம் தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு அடையும் நிலை உருவாகியுள்ளது.

(ஈழமுரசு — 10-2-85)

### பிந்திய செய்தி

குளோபலில் மேலதிக ரெலிபோன் இணைப்புக்கள்

கேட்டிலும் துணிந்து நின்று, இழப்பிலும் சோர்வு தவிர்த்து, உடனடியாக மேலதிகமாக இரு தொலைபேசி இணைப்புகள் ஏற்படுத்தி, குளோபல் ரெலெக்ஸ் ரெலிபோன் சேவைகள் முன்னைய சேவைத்தரம் எவ்வகையிலும் குறையாது, தொடர்ந்தும் இரவு பகல் 24 மணி நேரமும் எந்நாளும எப்பொழுதும் நடாததபபெற்று வருகின்றன.

Advt.


'ஈழமுரசு' சாப்பாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 16-2-1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336